செய்திப் பணிப்பாளர் /செய்தி ஆசிரியர் 23.11.2020

# செய்தி வெளியீடு

## தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(அடிப்படை 2013=100) : ஒக்டோபர் 2020


**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்**

**நிதி அமைச்சு**

தொலைபேசி: 011-2147414 தொலைநகல்: 011-2877945 மின்னஞ்சல் prices@statistics.gov.lk


2020 ஒக்டோபர் மாதத்திற்கான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(தே.நு.வி.சு.) பற்றிய அறிக்கையை வெளியிடுகையில் தொகைமதிப்பு, புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகம், தே.நு.வி.சு. அடிப்படையான வருடத்தின் மீது வருட மாற்றத்தினால் (கடந்த வருடத்தின் அதே மாத தே.நு.வி.சு. மீது நடப்பு மாத தே.நு.வி.சு. இல் சதவீத மாற்றம்) அளவிடப்பட்டவாறு முதன்மைப் பணவீக்கமானது 5.5% ஆக கணக்கிடப்பட்டுள்ளது என தெரிவித்தார். 2020 செத்தெம்பர் மாதம் பொருட்டு பதிவாகிய முதன்மைப் பணவீக்கம் 6.4% ஆக இருந்தது. 2020 ஒக்டோபர் மாதத்தில் உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்து பணவீக்க வீதத்திற்கான பங்களிப்புகள் முறையே 4.6%, 0.8% ஆக காணப்படுகின்றன. அதேவேளை, 5.6% முதன்மைப் பணவீக்கத்தின் பெறுபேறாக 2019 ஒக்டோபர் மாதத்தில் பணவீக்கத்திற்கான உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்தான பங்களிப்புகள் முறையே 3.2%, 2.4% ஆக காணப்பட்டன. 2019 ஒக்டோபர் மாதத்துடன் ஒப்பிடுகையில், உணவுப் பிரிவில் அதிகரித்த சதவீதம் பதிவாகியமைக்கான பிரதான காரணம், 2020 ஒக்டோபர் மாதத்தில் நிலவிய உயர்வான விலை மட்டங்களே குறிப்பாக தேங்காய், அரிசி, மஞ்சள்தூள், தேங்காய் எண்ணெய் மற்றும் சீனி ஆகியவற்றின் அதிகரித்த விலைகளாகும்.

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(தே.நு.வி.சு.) மாதம் மீது மாத மாற்றங்களை ஒப்பிடுகையில் 2020 செத்தெம்பர் மாதத்தில் பதிவாகிய 138.9 இருந்து 2020 ஒக்டோபர் மாதத்தில் 139.1 ஆக அதிகரித்துள்ளது. இது, 2020 செத்தெம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில், 0.2 சுட்டெண் புள்ளி அல்லது 0.1 சதவீத அதிகரிப்பொன்றைக் காட்டுகிறது. இந்த மாதம் மீது மாத மாற்றத்திற்கான காரணம், உணவுப்பொருட்களின் சுட்டெண் பெறுமதிகள் 0.14% இனாலும் உணவல்லாப்பொருட்களின் சுட்டெண் பெறுமதிகள் 0.02% இனாலும் அதிகரித்தமையேயாகும்.

உணவுப்பொருட்களின் விலை அதிகரிப்புக்கள் பெரிய வெங்காயம், அரிசி, சின்ன வெங்காயம், தேங்காய், மைசூர் பருப்பு, பச்சை மிளகாய், செத்தல் மிளகாய், உருளைக்கிழங்கு, மஞ்சள்தூள், மற்றும் வெள்ளைப்பூடு என்பன பொருட்டு பதிவாகின. எனினும், உணவுப்பொருட்களின் குறைந்த சுட்டெண் பெறுமதிகள் புதிய பழங்கள், புதிய மீன், முட்டை, மரக்கறி, கோழி இறைச்சி மற்றும் சீனி என்பன பொருட்டு பதிவாகின.

முந்திய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2020 ஒக்டோபர் மாதத்தில் உணவல்லாப்பொருட்களின் சுட்டெண் பெறுமதிகளின் அதிகரிப்புகளுக்கு காரணம், 'வீடமைப்பு,நீர்,மின்வலு,எரிவாயு,ஏனைய எரிபொருள்கள்'(பராமரிப்புக்கான பொருட்கள்), 'தளபாடம், குடித்தன உபகரணம் & வழமையான குடித்தன பராமரிப்பு' மற்றும் 'நானாவிதப் பொருட்களும் சேவைகளும்' ஆகிய பிரிவுகளில் ஏற்பட்ட விலை அதிகரிப்புக்களாகும். எனினும், 'அற்ககோல் பானங்கள், புகையிலை & தியக்க மருந்துகள்'(பாக்கு) பிரிவு பொருட்டு விலை குறைவு பதிவாகியது. மேலும், முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில், 'ஆடையும் காலணியும்', 'பொழுதுபோக்கும் கலாசாரமும்' மற்றும் 'உணவகமும் ஹோட்டல்களும்' ஆகிய பிரிவுகள் பொருட்டு சற்று விலை அதிகரிப்புக்கள் பதிவாகின. அதேநேரம், 'சுகாதாரம்', 'போக்குவரத்து', 'தொடர்பாடல்' மற்றும் 'கல்வி' ஆகிய பிரிவுகளின் விலைச் சுட்டெண்கள் இம்மாதத்தில் மாற்றமின்றி காணப்பட்டன.

2020 ஒக்டோபர் மாதத்திற்கான தே.நு.வி.சு. அடிப்படையான வருடத்தின் மீது வருட மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறு பொருளாதாரத்தில் தளம்பலுறும் உணவு, வலு மற்றும் போக்குவரத்து போன்றன தவிர்ந்த மூலாதார பணவீக்கத்தை பிரதிபலிக்கும் மையப் பணவீக்கமானது, 2020 செத்தெம்பர் மாதத்தில் பதிவாகிய 4.8% இருந்து 4.5% வரை குறைந்துள்ளது.



அசைவுகளும் (அடிப்படை 2013=100) தே.நு.வி.சு மையம் வருடத்தின் மீது வருட முதன்மைப் பணவீக்கம் மற்றும் வருடத்தின் மீது வருட மையப் பணவீக்கம்

## தே.நு.வி.சு. இன் அசைவுகள் (அடிப்படை : 2013 = 100)

| வருடம் | மாதம் | சுட்டெண் | | சுட்டெண்ணிற்கான மாதத்திற்கு மாதம் % மாற்றம் | | வருடத்தின் மீது வருட பணவீக்க % | |
|---|---|---|---|---|---|---|---|
| | | தே.நு.வி.சு (முதன்மை) | தே.நு.வி.சு (மையம்) | தே.நு.வி.சு (முதன்மை) | தே.நு.வி.சு (மையம்) | தே.நு.வி.சு (முதன்மை) | தே.நு.வி.சு (மையம்) |
| **2019** | ஒக்ரோபர் | 131.9 | 134.4 | 1.0 | 0.3 | 5.6 | 5.6 |
| | நவம்பர் | 132.9 | 134.6 | 0.8 | 0.1 | 4.1 | 5.5 |
| | டிசம்பர் | 135.0 | 134.2 | 1.6 | -0.3 | 6.2 | 5.2 |
| **2020** | ஜனவரி | 137.0 | 135.3 | 1.5 | 0.8 | 7.6 | 3.9 |
| | பெப்ரவரி | 137.0 | 135.8 | 0.0 | 0.4 | 8.1 | 3.4 |
| | மார்ச் | 135.2 | 136.0 | -1.3 | 0.1 | 7.0 | 3.2 |
| | ஏப்ரல் | 134.8 | 136.9 | -0.3 | 0.7 | 5.9 | 3.2 |
| | மே | 135.4 | 137.9 | 0.4 | 0.7 | 5.2 | 3.7 |
| | யூன் | 137.3 | 138.9 | 1.4 | 0.7 | 6.3 | 4.4 |
| | யூலை | 137.3 | 139.4 | 0.0 | 0.4 | 6.1 | 4.5 |
| | ஓகஸ்ட் | 137.8 | 139.9 | 0.4 | 0.4 | 6.2 | 4.6 |
| | செப்ரெம்பர் | 138.9 | 140.4 | 0.8 | 0.4 | 6.4 | 4.8 |
| | ஒக்ரோபர் | 139.1 | 140.5 | 0.1 | 0.1 | 5.5 | 4.5 |

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்